**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., L.L.M.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ம் நாள் வியாழக்கிழமை

**I.A.No.1/2025 in O.S.No.166/2020**

**TNTM 03000268/2020**

A. உதயகுமார் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிராக/

K. சடையாண்டி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 22.10.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.R.மனோகரன்,M.B.A.,B.L., திரு.S.சரவணன்,M.A.B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.நாராயணன்,B.A.L.LB., அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பிரசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் 21.01.2023ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 9 விதி 13 மனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 699 நாட்கள் காலதாமதம் ஆனதை மன்னித்து உத்தரவிடக் கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1**. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்னுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. மேற்படி வழக்கை எதிர்மனுதாரர்/வாதி எனக்கெதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மனுதாரருக்கு கனம் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திரு.திருஞானம் என்பவரை வைத்து ஆஜர் ஆகி பதிலுரையும் தாக்கல் செய்திருந்தார். மனுதாரர் தரப்பில் வாதியினை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி 23.01.2023 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு மஞ்சள் காமாலை காரணமாக நாட்டு மருந்து சாப்பிட்டு வீட்டிலிருந்தே ஓய்வு எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார். அதனால் மனுதாரரால் மேற்படி வாய்தா தேதியன்று நீதிமன்றத்தில்

ஆஜர் ஆக முடியவில்லை. அதன் பின்னர் மனுதாரர் தனது தரப்பு வழக்கறிஞரை அணுகி மேற்படி வழக்கு குறித்து கேட்டபோது மேற்படி வழக்கில் மனுதாரரை அழைத்தும் ஆஜர் ஆகாத காரணத்தினால் மாண்பமை நீதிமன்றத்தால் மனுதாரருக்கு எதிராக கடந்த 21.03.2023 அன்று ஒரு தலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டது தெரியவந்தது. மனுதாரர் உடல் நிலை சரியாகிய பிறகு வெளியூர் சென்று விட்டதால் மேற்படி ஒருதலைபட்ச உத்திரவினை இரத்து செய்ய ஆர்டர் 9 ரூல் 13 மனுவினை 30 நாட்களுக்குள் தாக்கல் செய்யவேண்டும். ஆனால் உடல் நிலை சரியாகி மனுதாரர் மனு தாக்கல் செய்ய 699 நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டது. ஆகையால் காலதாமதம் ஆன 699 நாட்கள் பிரிவு 5 காலவரையறை சட்டப்படி மன்னித்து மேற்படி மனுவினை அனுமதித்து உத்தரவிடவேண்டும் என்றும், இல்லையெனில் மனுதாரருக்கு கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை சுருக்கம்:-**

மனுதாரரின் மனு பொய்யானது சட்டப்படியும் சங்கதிப்படியும் ஏற்புடையதல்ல. மனுவில் கூறியுள்ள விவரங்களை மனுதாரரே நிரூபணம் செய்யவேண்டும். மனுதாரர் கடந்த 21.08.2019ம் தேதி ரூ.4,00,000/-ம் முன்பணம் பெற்றுக்கொண்டு எதிர்மனுதாரருக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார். மீதி கிரையத்தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுத்த மனுதாரர் முன் வராததால் அசல் வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 21.03.2023ம் தேதி மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் மீதி கிரையத்தொகை ரூ.50,000/-த்தை வைப்பீடு செய்துள்ளார். எதிர்மனுதாரர் நீதிமன்றம் மூலம் கிரையம் பெறுவதற்காக நிறைவேற்று மனு எண். 126/2024 ஐ தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் இந்த மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. தற்போது இந்த மனுவை பொய்யான காரணங்கள் குறிப்பிட்டு மருத்துவ சான்று எதுவும் தாக்கல் செய்யாமல் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டதாக கூறி 699 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ள இம்மனுவை சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மட்டுமே தீர்வுகாண முடியும். மனுதாரருக்கு இந்த வழக்கில் 2023ம் ஆண்டே ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரிந்துக்கொண்டே அசல் வழக்கை காலம் கடத்தவேண்டி இந்த மனுவை நிறைவேற்று மனு தாக்கல் செய்த பிறகு தாக்கல் செய்துள்ளார். காலதாமதம் ஏற்பட்ட ஒவ்வொரு நாளுக்கும் மனுதாரர் விளக்கம் அளிக்கவேண்டும். மனுதாரருக்கு எப்போது ஒருதலைபட்ச தீர்ப்பாணை விவரம் தெரியவந்தது என்ற விவரம் மனுவில் குறிப்பிடவில்லை. தனக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டதாகவும், வேறு வழக்கறிஞரை அமர்த்தியதால் தாமதம் ஏற்பட்டதாக கூறியிருப்பது மனுதாரரின் தவறான எண்ணத்தை காட்டுகிறது. நிறைவேற்றுதல் மனு செயல்முறையை காலம் கடத்தவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

4. **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி எதிர்மனுதாரரால் இந்த மனுதாரர் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார். அசல் வழக்கில் வா.சா.1ஐ இந்த மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு நாட்டு மருந்து சாப்பிட்டு வீட்டில் இருந்தே ஓய்வு எடுத்து வந்தார். அதனால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. பின்னர் வழக்கறிஞரை அணுகி விவரம் கேட்டபோது 23.01.2023ம் தேதி ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு 21.03.2023 அன்று ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாக விவரம் கூறினார். எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. உடல்நிலை சரியான பிறகு வெளியூர் சென்றுவிட்டதால், ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய உரிய நேரத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை. அதனால் ஏற்பட்டுள்ள 699 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர் வேண்டுமென்றே வழக்கில் குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துள்ளார். மஞ்சள் காமாலை நோய்க்கு மனுதாரர் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் மீதி கிரையத்தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார். நீதிமன்றம் மூலம் கிரையம் பெறுவதற்காக நிறைவேற்று மனு எண்.126/2024 தாக்கல் செய்துள்ளார். நிறைவேற்று மனுவை காலதாமதம் செய்வதற்காக தவறான எண்ணத்துடன் இந்த மனுவை மனுதாரர் தாக்கல் செய்திருக்கிறார். உரிய காரணங்கள் குறிப்பிடாமல் 699 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கவேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

6. அசல் வழக்கில் வா.சா.1ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் கடந்த 23.01.2023ம் தேதி மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு 21.03.2023ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. தனக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு நாட்டு மருந்து சாப்பிட்டு வீட்டிலிருந்தே ஓய்வு எடுத்துவந்ததால், குறுக்கு விசாரணை செய்ய ஆஜராக முடியவில்லை என்று மனுவில் விவரம் கூறப்பட்டுள்ளது. ஆனால், மனுதாரர் மஞ்சள்

காமாலைக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பதற்கான மருத்துவ சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் மனுதாரருக்கு தனது தரப்பு எதிர் வழக்குரையை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பினை அளிப்பது இயக்கை நீதியின்பால் அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் உரிய காலத்தில் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனு தாக்கல் செய்யாமல் 699 நாட்கள் காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.2,000/—த்தை வருகின்ற 17.11.2025 தேதிக்குள் செலுத்த வேண்டும், செலுத்த தவறினால் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும். அழைக்க வாய்தா 18.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.11.06 17:21:13 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:—</u> இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.11.06 17:21:25 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.